**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.89/2017**

**Prosecution witness : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | :வேல்முருகன் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused absent.PFA)

**25.04.2023**

**முதல் விசாரணை**

நான் விளாச்சேரியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2006 ம் வருடத்தில் ஒரு நாள் நான் வேலை முடித்து விட்டு இரவு 8.45 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது பக்கத்து தெருவில் சத்தம் கேட்டது. நான் போய் சென்று பார்த்த போது பாண்டியம்மாள் என்பவருக்கு காதில் இரத்தம் வந்து கொண்டிருந்தது. அவரை கீழே தள்ளிவிட்டதாக சொல்லிக் கொண்டிருந்தார். அவரிடம் இருந்த நகைகளை பறிப்பதாக சொன்னார். அவரை ராஜேந்திரன் என்பவர் இதுபோல் செய்தார். அருகில் இருந்தவர்கள் உதவியுடன் பக்கத்தில் இருந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரித்தார். பாண்டியம்மாள் தற்போது இறந்துவிட்டார்.

**எதிரி தரப்பில் கு.வி.**

நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றும் பாண்டியம்மாளுக்கு ஆதரவாக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.